# பாடம் 8

## நூலகம்

# தேனருவி - மாமா



# நூலக தினம்




அதுவா! நூல்களைச் சேமித்து வைத்திருக்கும் இடம்தான் நூலகம். அது ஒரு பொது இடம். அங்கு அனைவரும் வந்து புத்தகம் படிப்பாங்க ! இன்று "நூலக தினம்" அதைக் கொண்டாடுவதற்காக நூலகத்தை அழகுபடுத்தியிருப்பார்கள்.

# நூலகம்

சொல்கிறேன் கேள், 'நூல் + அகம் = நூலகம்'. பல்வேறு துறை சார்ந்த நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடமே நூலகம் ஆகும். நூல் நிலையம், புத்தகச் சாலை என்பன நூலகத்தின் வேறு பெயர்களாகும்.



# நூலகத்தில் உள்ள புத்தகங்கள்

நூலகத்தில் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழ், ஆங்கிலம் மற்றும் வேறு பல மொழிகளைச் சார்ந்த இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்கள், தத்துவ நூல்கள், வரலாற்று நூல்கள், புவியியல் நூல்கள் போன்றவையும் இடம் பெற்றிருக்கும்.

நூல்கள் மட்டுமின்றி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் இதழ்கள் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும்.



# நூலகத்தின் பயன்கள்

- நம் அறிவு வளர்கிறது.
- நம்முடைய நேரம் பயனுள்ள முறையில் அமைகிறது.
- வேலைவாய்ப்புத் தொடர்பான நூல்களைப் படிப்பதால் நல்ல வேலையில் சேரவும் முடிகிறது.
- மூளை புத்துணர்ச்சி பெறுகிறது.
- தன்னம்பிக்கை ஏற்படுகிறது.



# வாசகர் வட்டம்



# பெரியோர்களின் கருத்துகள்



# நன்றி